# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1972/51 - 2016 ජුනි මස 24 වැනි සිකුරාදා - 2016.06.24

1972/51 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: DIVWR/LND/AURAQ/10/5.

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:
LD/05/2009/PC/17.

பின்வரும் காணி தெதுருஓயா செயல் திட்ட வலது பக்க கால்வாய் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 1239 விலாகடுபொத்த - பாளுகம கிராம அலுவலர் பிரிவில் பாளுகம கிராமத்தில் அமைந்திருக்கும் இ.கி.வ 2521, தாள் இலக்கம் 05, பிற்சேர்க்கை 05 இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 01 எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

1. **துண்டு இல. 47**

காணியின் பெயர்: தங்கஹமுளவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் உண்டு; உரிமை கோருபவர்: தென்னகோன் முதியன்சேலாகே டிகிரி பண்டார தென்ன கோன்; விஸ்தீரணம்: 0.0658 ஹெக்டயார்.

**எல்லைகள் :**

வடக்கு: 19 உம் 44 ஆவதும் காணித்துண்டுகள்; கிழக்கு: 44 உம் 19 ஆவதும் காணித்துண்டுகள்; தெற்கு: 19 ஆவது காணித்துண்டு; மெற்கு: 19 ஆவது காணித்துண்டு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, வாரியபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

கே.எம்.எச்.எஸ்.கே. ஜயலத்,
பிரதேச செயலாளர்,
வாரியபொல.

பிரதேச செயலகம்,
வாரியபொல,
2016, ஆனி 22.

7 - 523

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: நுவ/3/1/2/கா.எ/32.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03/J/88/D/13.

இல. 1296/09 உம் 2003 யூலை மாதம் 07 ஆந் திகதியுமுடைய அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் பகுதி III இல் 2A பக்கத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 03 மற்றும் 05 ஆகிய துண்டுகளிற்காக இல. 1144/15 உம் 2000 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் தியதியுமுடைய அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் பகுதி III இல் 2A பக்கத்தில் கடைசிப்பகுதி கீழே காட்டப்பட்டவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுவரெலியா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.பீ.கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2016, யூன் 16.

7 - 524

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.